# அக்டோபர் – 18 – வியாழன்

## புனித லூக்கா – நற்செய்தியாளர்

### ஆண்டவரே! நீர் உருவாக்கிய யாவும் நன்றி செலுத்தும்: திபா. 145:10

## முதல் வாசகம் : 2 திமோத்தெயு 4 : 9 - 17

அன்பிற்குரியவரே! விரைவில் என்னிடம் வர முழுமுயற்சி செய்.தேமா இன்றைய உலகப்போக்கை விரும்பி என்னைவிட்டு அகன்று, தெசலோனிக்கா சென்றுவிட்டார். கிரேஸ்கு கலாத்தியாவுக்கும் தீத்து தல்மாத்தியாவுக்கும் சென்றுவிட்டனர். என்னுடன் லூக்கா மட்டுமே இருக்கிறார். மாற்கை உன்னுடன் கூட்டிவா. அவர் திருத்தொண்டில் எனக்கு மிகவும் பயனுள்ளவர்.திக்கிக்குவை நான் எபேசுக்கு அனுப்பிவிட்டேன்.நீ வரும்போது நான் துரோவாவில் கார்ப்புவிடம் விட்டுவந்த போர்வையையும் நூல்களையும், குறிப்பாகத் தோற்சுருளையும் எடுத்துவா.கன்னானாகிய அலக்சாந்தர் எனக்குப் பலதீமைகளைச் செய்தான். அவன் செயலுக்குத் தக்கவாறு ஆண்டவர் அவனுக்குப் பதிலளிப்பார்.அவனிடமிருந்து உன்னைக் காத்துக்கொள். அவன் நம்முடைய போதனையை அதிகம் எதிர்த்தவன்.நான் முதன்முறை வழக்காடிய போது எவரும் என்பக்கமிருக்கவில்லை எல்லாரும் என்னைவிட்டு அகன்றனர். அக்குற்றம் அவர்களைச் சாராதிருப்பதாக.நான் அறிவித்த செய்தி நிறைவுற்று, அனைத்து நாட்டவரும் அதனைக் கேட்க வேண்டுமென்று ஆண்டவர் என் பக்கம் நின்று எனக்கு வலுவூட்டினார் சிங்கத்தின் வாயிலிருந்தும் என்னை விடுவித்தார்.

**பதில்பாடல் :** உம் அன்பர்கள் உமது அரசின் மாட்சியை அறிவிப்பார்கள்.

## நற்செய்தி : லூக்கா 10 : 1 - 9

அக்காலத்தில் ஆண்டவர் வேறு எழுபத்திரண்டு பேரை நியமித்து, அவர்களைத் தாம்போகவிருந்த எல்லா ஊர்களுக்கும் இடங்களுக்கும் தமக்கு முன்னே இருவர் இருவராக அனுப்பினார். அப்போது அவர் அவர்களை நோக்கிக்கூறியது: “அறுவடை மிகுதி வேலையாள்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள். புறப்பட்டுப்போங்கள் ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவதுபோல் உங்களை நான் அனுப்புகிறேன். பணப்பையோ வேறுபையோ மிதியடிகளோ எதுவும் நீங்கள் எடுத்துச் செல்லவேண்டாம் வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம்.5 நீங்கள் எந்தவீட்டுக்குள் சென்றாலும், “இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக!“ என முதலில்கூறுங்கள். அமைதியை விரும்புபவர் அங்கு இருந்தால், நீங்கள் வாழ்த்திக்கூறிய அமைதி அவரிடம் தங்கும் இல்லாவிட்டால் அது உங்களிடமே திரும்பிவிடும். அவர்களிடம் உள்ளதை நீங்கள் உண்டு குடித்து அந்த வீட்டிலேயே தங்கியிருங்கள். ஏனெனில் வேலையாளர் தம் கூலிக்கு உரிமை உடையவரே. வீடுவீடாய்ச் செல்ல வேண்டாம். நீங்கள் செல்லும் ஊரில் உங்களை ஏற்றுக்கொண்டால் உங்களுக்குப் பரிமாறுவதை உண்ணுங்கள். அங்கு உடல் நலம் குன்றியோரைக் குணமாக்கி, இறையாட்சி அவர்களை நெருங்கிவந்துவிட்டது எனச் சொல்லுங்கள்” என்றார்.

**தியானம்:** இறைமகன் இயேசுதாம் தந்தையிடமிருந்து கொண்டு வந்த நற்செய்தியை அறிவிக்க தம்மோடிருந்த அப்போஸ்தலர்களைத் தவிர வேறு எழுபத்திரெண்டு சீடர்களை நிமித்து அவர்களுக்குப் பணிவாழ்வின் முக்கியமான பலவிடயங்களை அறிவுறுத்தி அனுப்பிவைத்தார். நற்செய்தி அறிவிப்புப் பணி என்பது அன்று தொட்டு உலகத்தின் இறுதிவரை மிகவும் சவால் வாய்ந்த ஒன்றாகவே இருக்கும் என்பதை மிகத் தெட்டத்தெளிவாக அவர்களுக்கு இயேசு சொல்லி வைத்தார். சவால்களை சமாளிப்பது, அல்லது சளாப்பிவிடுவது அல்ல நற்செய்திப் பணி. சவால்களைச் சந்திப்பதும், அவைகளை எதிர்கொள்வதுமே உண்மையான நற்செய்திப் பணி. கடவுள் முன்னிலையில் சரியானதை சரி என்றும், தவறானதைத் தவறென்றும் சுட்டிக்காட்டி, அவற்றைச் சீர்செய்து கொள்ள அறிவுரைகள் வழங்கி கடவுளுக்குகந்த காரியங்களை மட்டும் செய்ய மக்களை தூண்டுவதே உண்மையான நற்செய்திப் பணி. பணம், பொருள் என்பன பணிவாழ்வின் பரம எதிரிகள். எதுதேவை, எது தேவையற்றது என்பதை கவனமாகத் தெரிந்துகொள்வதில் இது தங்கியிருக்கின்றது. எப்போதும் பணம், எதற்கெடுத்தாலும் பொருள் பற்றிப்பேசும் நாம் எவரும் இன்றைய நற்செய்தியின் ஒளியில் சிந்திக்க அழைக்கப்பட்டிருக்கின்றோம். தமது அறுவடைக்கு தேவையான வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் எஜமானை மன்றாடும்படி இறைமகன் இன்று நம் ஒவ்வொருவரையும் கேட்கின்றார். தேவ அழைத்தலுக்காக நாம் தொடர்ந்தும் மன்றாடும் அதேவேளை,தங்கள் குடும்பச் சுமைகளோடு கூட, நற்செய்திப் பணியிலும் தாகம் கொண்டு முன்வரும் அனைவரையும், கடவுள்தாமே, ஆசீர்வதித்து நெறிப்படுத்தி ஆசீர்வதித்து வழிநடாத்தவேண்டுமென்றும் மன்றாடுவோம்.